விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 4 முறை 24 இதழ் 248
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-10-84

## எம். ஜி. ஆர். உடல்நிலை
# தொடர்ந்து சீராகவுள்ளது
## ஜப்பானிய டாக்டர்கள் இன்று வருகை

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ராமச்சந்திரனின் உடல்நிலை தொடர்ந்தும் சீராகவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே தெரிவித்தார் முதலமைச்சரின் நரம்புப் பாதிப்பில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லையென்றும் அவர் கூறினர்.

**ஜப்பானிய டாக்டர்கள்**

திரு. எம். ஜி ராமச்சந்திரனுக்குச் சிகிச்சையளிப்பதற்காக இரண்டு ஜப்பானிய நரம்பியல் நிபுண டாடக்டர்கள் இன்று சென்னை வரவுள்ளனர்.

முதலமைச்சர் விரைவில் குணமடைந்து மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கூறும் தீர்மானம் நேற்றுத் தமிழக அமைச்சர்களினுல் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ். எல். குரானு நேற்று அப்பலோ மருத்துவ மனைக்குச் சென்று முதல்வரின் உடல்நிலை குறித்து விசாரித்து அறிந்து கொண்

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

# மாதகல் 2-வது நாளாக 'முற்றுகை'!

# மக்கள் வெளியேறி கோவில்களில் தஞ்சம்!!

(நமது அலுவலக, பண்டத்தரிப்பு நிருபர்கள்)

**மாதகல் கிராமப் பகுதிகளில் இரண்டாவது நாளாக நேற்று நடைபெற்ற ஆயுதப் படையினரின் பலத்த சோதனையைத் தொடர்ந்து, மாதகலில் வாழும் பெரும்பாலான மக்கள், தங்களது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்!**

பண்டத்தரிப்பு, சில்லாலை, பனிப்புலம் ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களிலும், பொது இடங்களிலும் குடும்பம் சகிதம் தஞ்சம் புகுந்திருக்கும் மாதகல் கிராம மக்களுக்கு. பொதுமக்கள் உணவளித்து வருகின்றனர்.

**கைக்குண்டு வீச்சு**

மாதகல் பகுதியில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் கடும் சோதனை மேற்கொண்டபோது, இராணுவ கவசவாகனம் ஒன்றை நோக்கி வீசப்பட்டதாகக் கூறப்படும் கைக்குண்டு வெடித்ததால் 3 இராணுவ வீரர்களும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் படுகாயமடைந்ததுடன் கவச வாகனமும் சேதமடைந்துள்ளது.

படுகாயமடைந்த ஆயுதப் படையினர் விமான மார்க்கமாக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

குண்டுவீச்சினுல் பாதிப்படைந்த கவசவாகனம் நேற்றுக்காலை இராணுவ முகாமுக்கு வேறுவாகனம் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கைக்குண்டுவீச்சினுல் இராணுவ வீரர்களான ரணசிங்க, வீரசூரியா, விமல்ஆராச்சி கொழும்பிலிருந்து வந்த பொலிஸ் உத்தியோகத்தர் சாமசிறி ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

**தீவைப்பு சம்பவங்கள்**

மாதகல் பகுதியில் கடந்த இருநாட்களாக தீவைப்பு கொள்ளை போன்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் 4 கலம் பார்க்க)

சுவிஸ் முடிவு:
## தமிழர்கள் ஆட்சேபமனு

(பேர்ண்,

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதென்ற சுவிஸ் அரசாங்கத்தின் முடிவை சுவிஸ் வந்திருக்கும் தமிழர்கள் எதிர்த்துள்ளனர்!

[௦-ம் பக்கம் பார்க்க]

## நவீன சந்தைப்பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் எட்டுக் கடைகளின் இரும்புக் கதவுகள் சேதமடைந்தன.

இச்சம்பவம் பற்றி யாழ். நவீன சந்தை வர்த்தக உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. அ. சங்கரப்பிள்ளை தாய்ச் சங்கத்திற்கு அறிவித்துள்ளார்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலிருந்து
# இராணுவம் வாபஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த 3 வருடங்களாக முகாமிட்டிருந்த இராணுவத்தினர் முற்ருக வாபஸ்பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

இவர்கள் கல்லடி அரசாங்க

(8ம் பக்கம் பார்க்க)

# வீடுகள் தீக்கிரை

[வவனியா]

புளியங்குளத்தில் ஆறு வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

இனந்தெரியாத நபர்களால் செய்யப்பட்டுள்ள இச்சம்பவத்தில் ஆறு வீடுகள் முற்ருக எரிந்து காணப்படுகின்றன.

## பரு. ஹாட்லி, மெதடிஸ்த தவிர்ந்த பாடசாலை மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்புவர்

[புலோலி]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி ஆகிய கல்லூரிகளின் மாணவ, மாணவிகள் தவிர்ந்த ஏனைய பாடசாலை மாணவ, மாணவிகள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டுத் திங்கட்கிழமை தொடக்கம் பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

## "இடைஞ்சல்கள் இருந்தபோதும் அடிப்படை உரிமைகளை உயர் நீதிமன்றம் பாதுகாக்கும்"
### பிரியாவிடையின்போது பிரதம நீதியரசர் உறுதி

(கொழும்பு)

''அடிப்படை உரிமைகளின் பாதுகாவலனுக உயர் நீதிமன்றம் இருந்து வந்துள்ளது. ஆனுல் அதனைச் செயல்படுத்த முனைகையில் துர்ப்பாக்கியமான விளைவுகளை எதிர் நோக்கநேர்ந்துள்ளது'' என்று உயர் நீதிமன்றபிரதம நீதியரசர் திரு நெவில் சமரக்கோன் நேற்றுஉய நீதிமன்றத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடையின் போது பதில் அளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இம்மாதம் 22-ம் திகதி நீதியரசர் சமரக்கோன் ஓய்வு பெறவிருக்கிருர். அன்றைய தினமே அவர் தமது 60-வது வயதைப்பூர்த்தி செய்கிருர் அதையொட்டி நேற்று உயர் நீதிமன்றம் விசேஷ அமர்வொன்றை நடத்தியது. உயர் நீதிமன்ற நீதிபதிகள், நீதியமைச்சர் டாகடர் நிஸங்கவிஜயரத்ன,அட்டோர்னி ஜெனரல் சிவாபசுபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மாஜிஸ்டரேட்கள், சட்டத்தரணிகள்

[5ம் பக்கம் 4ம் கலம் பாாக்க]

## கச்சதீவு விவகாரம்

சென்னை, அக். 19

இலங்கை அரசு கச்சதீவை இராணுவத்தளமாக்காதவாறு

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### மஹியங்கனை விகாரை
## திறக்கப்படாத நிலையில் இரும்பு பெட்டி மீட்பு!

(கொழும்பு)

மஹியங்கனை ரஜமகாவிகாரையில் நேற்றுமுன்தினமிரவு கொள்ளையர்களால் களவாடப்பட்ட பெறுமதிமிக்க புனித சின்னங்களையும் பேழைகளையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

இப்பொருகள் இரும்புப் பெட்டியொன்றினுள் விகாரை வளவுக்கு அருகில் கைவிடப்பட்டநிலையில் கண்டுபிடிக்கப்பட்டது

இந்த இரும்புப்பெட்டிக்குள் 150 புனித சின்னங்களும்,

(8-ம் பக்கய பார்க்க)

உ

விராட் விஸ்வப் பிரம்மணே நம:

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் இரத்தாக்ஷி வருடம் ஐப்பசி மாதம் 5-ம் திகதி (21-10-84) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 7-40 மணி வரையுள்ள துலாலக்கின சுப முகூர்த்தத்தில்,

| எமது ஏக புத்திரன் திருநிறைசெல்வன் **நவநீதன்** அவர்களுக்கும் (காபறேற்றர் தருத்துபவர்) | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறைசெல்வி **விக்கினேஸ்வரி** அவர்களுக்கும் |
|---|---|

நல்லை சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ள திருமண வைபவத்திற்கு தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு உபசாரம்: மணமகன் இல்லத்தில் அன்றைய தினம் (21-10 84) மாலை 4 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்.**

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

| ம்வ.கனகரத்தினப் பத்தர் குடும்பத்தினர் | ஐ. இராஜேந்திரப் பத்தர் குடும்பத்தினர் |
|---|---|
| ''நவ பவனம்'', நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். | 525/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |

244

# விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்புத்துறை சுவாமியார் வீதி, 22/1, இலக்கத்திலுள்ள 10 நிலப்பரப்பு காணி பயன்தரு விருட்சங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. க. சற்குணநாதன், சட்டத்தரணி 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 292

நவீனவசதியும், பார்வையுமுடைய புதியவீடு. (4 அறைகள், வரவேற்பறை (மாபிள் பதிக்கப்பட்டது குளியல்அறைகள் சமையல்அறைகொண்டது மின்சார, பைப் வசதிகளுடன் பள்ளிக்கூடம், பஸ் நிலையம், ஸ்ரேசன் என்பவற்றிற்குஅண்மையில் விற்பனைக்குண்டு. தொடர்பு; 187, 3-ம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22029. 286

கடற்கரை வீதி, பருத்தித்துறையில் வெளிச்ச வீட்டிற்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 9½ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி R. A. ராஜசிங்கம், 14/2 பிளெச்சர் வீதி, சுண்டிக்குளி' 235

Sony (Remote Controller) T.V.2062 Eமொடல், வீடியோடெக் (N V 370) விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லச்சாமி, 84, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 295

மானிப்பாயில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல: 319 C/o ஈழநாடு. 319

கண்டி வீதி, நுணுவில் கிழக்கு 93 K.M.க்கு முன 4½ பரப்புக் காணியும், மூன்றுபக்கமதிலும் கிணறு, மின்சார வசதியும், பயிர்களும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. K. B. சுந்தரம், T. P.22454, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 298

பருத்தித்துறை மக்கள்சந்தை எதிரே தெற்குப்புறமாகவுள்ள வி. வி. கே. மூர்த்தி கடை, கட்டிடங்கள் இரண்டும் விற்பனைக்குண்டு. வ. வ. கணேசமூர்த்தி, 27, பிரதான வீதி, பருத்தித்துறை. 314

கோண்டாவில் டிப்போவிற்குப் பின்னால் பலாலி ரோட்டிற்குச் சமீபமாக தோட்டம் செய்வதற்கு அல்லது வீடுகட்டுவதற்குரிய கிணற்றுடன்கூடிய ஆறு பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: கந்தசாமி ஐயர், கோண்டாவில் கிழக்கு (பலாலி ரோட் சந்திக்கு அண்மையில்) 317

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ¾அல்லது 1½பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. நாகரத்தினம், 3/9, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 291

திருநெல்வேலி சந்தைக்கும் யாழ். பல்கலைக் கழகத்திற்கும் இடையில் வீடு கட்டக்கூடியதும் 8 முழ ஒழுங்கை வசதியும் ரோட்டிலிருந்து 2-ம் காணியாக உள்ள 1¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. சேவயர் படமும் உண்டு. தொடர்பு விளம்பர இல: 296, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 296

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஒரு மைல் சுற்றுடலில் வீடு கட்டக் கூடிய நல்ல தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வசதிகளுடன் காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. விலை பரப்பு ரூபா 7000.00 முதல் ரூபா 25,000.00 வரை No. 7, நீக்கலஸ் லேன், கச்சேரி—நல்லூர் ரோட், சுண்டிக்குளி—யாழ்ப்பாணம். 311

வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: மு. சுப்பிரமணியம் ஐயா வழக்கம்பரை, அம்மன் கோவில் சுழிபுரம். 309

கிளிநொச்சி இராமநாதபுரம் கல்மடு பிரதான வீதியில் 1¾ ஏக்கர் மேட்டுக் காணி உறுதியுடன் விற்பனைக்குண்டு. விலை 35 ஆயிரம் ரூபா தொடர்பு: M. ஆறுமுகையா, 273/12 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23075 (302)

ஜேமன் செப்பேட் இன அல்சேசன் குட்டிகள் விற்பனைக்குண்டு. விரும்பியவர்கள் உடன் பதிவுசெய்யவும். கார்த்திகை முதல் கிழமை கொடுக்கப்படும். சேவயர், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. (268)

யாழ்ப்பாணத்திலிருந்து 4 மைல் தொலைவில் கண்டி வீதி நாவற்குழியில் காணித் துண்டுகள் விற்பனைக்கு. 20, 82, 64, 32 பரப்புகளில் இவை உண்டு. தொழிற்சாலைகள், பயிர்ச் செய்கை, வியாபார ஸ்தலம், குடியிருப்புக்கு ஏற்றவை 3 பேஸ் மின்சார வசதி உண்டு. விபரங்கட்கு: விளம்பர இல. 266 C/o ஈழநாடு. (266)

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 22ந் திகதி திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (304)

38 SRI மேல் மிதி, ஒற்றைபவர், டெலிக்கா வான்; 83 SRI Bajaj ஸ்கூட்டர்; 84 SRI HONDA C 70 உடன் விற்பனைக்குண்டு. No 7, நீக்கலஸ் லேன், கச்சேரி—நல்லூர் ரோட் சுண்டிக்குளி — யாழ்ப்பாணம், (312)

ஈச்சமோட்டை பீச் ரோட் 1ம் ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய 1 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பேரானந்தன், 25, ஈச்சமோட்டை பீச்ரோட், 1ம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (322)

## வாடகைக்கு

கே. கே. எஸ். வீதி கொக்குவிலில் 4அறை, 1 குசினி, பாத்றூம், 2 ஹோல் அடங்கிய நல்ல வசதிஉள்ள வீடு வாடகைக்கு உண்டு. K. P. சுந்தரம். T.P. 22454 (299)

## தேவை

உடைகளை பில்லுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கு G.C.E. [O/L] சித்தியடைந்த 18 - 25க்குட்பட்ட மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் பெண் ஒருவர் தேவை. நற்சான்றிதழ்களுடன் 21-10-84 அன்று நேரில் வரவும். காலை 10 மணி - 12 மணி வரை. சன்லைட் றைக்கி ளீனேர்ஸ், யாழ்ப்பாணம். 318

கிளிநொச்சி நகரத்துக்கு அருகாமையில் உள்ள முன்னேறிய குடியேற்றத் திட்டத்தில் இருக்கும் பலசரக்கு கடைக்கு பொறுப்பாக ஒரு முகாமையாளர் தேவை கணிசமான பிணைப்பணம் கோரப்படும். 26-10-84ல் 'ரியூலிப்ஸ்', 153, பிரதான வீதி, யாழ்ப்பாணம். முற்பகல் 10-00 மணிக்கும் பிற்பகல் 2-00 மணிக்குமிடையில் நேரில்வந்து சந்திக்கவும். 307

## சோதிடம்

வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி? பன்னிரு ராசிகளின் பூரண பலன். ரூபா 2/50. V. A. சிவராசா, சோதிடர், வேலணை. 305

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் சுபாஸ் சந்திரன் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. /ரி 216

ஆறுமுகம் சுபாஸ் சந்திரன் கைம்பெண் சாந்தினி, டன்னலை, தெல்லிப்பழை.

— மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பபட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

க. வைரவநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
303


BECON
STUDY CENTRE
(ஸ்ரீதர் முன்பாக)
DAY CLASS
ஆரம்பம்: 22-10-84 10-15 a. m.
தூயகணிதம்:- தொடர், நுண் கணிதம்
பிரயோக கணிதம்:- எறியம், உராய்வு
ஆசிரியர்:
A. பத்மநாதன்
(256)

நிறைவான சேவை!
குறைந்த கட்டணம்!
நிறுவனங்களது கணக்குகள் தயாரிப்பில் நவீனமுறை புகுத்தல்கள்!
தொடர்பு கொள்ளவும்:
"Accounting Services"
சன்னதி ரோட், அச்சுவேலி
குறிப்பு:- கணக்குப்பதிவு தட்டெழுத்து பயிற்சி வகுப்புகளும் இடம் பெறும்.
252

TRIDENT OIL PRODUCTS
எங்கள் ஆலையில் உற்பத்தியாகும் சுத்தமான தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், பிண்ணுக்கு என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம். ஒரே தடவையில் கூடுதலாக கொள்வனவு செய்பவர்களுக்கு கமிஷன் வழங்கப்படும்.
கொப்பறா நியாய விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.
திரிசூலன் எண்ணெய் ஆலை,
பிரதான வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
[316]

கடை விற்பனைக்கு
ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள நாற் சந்தியில்
மாடியுடன் கூடிய கடை விற்பனைக்கு உண்டு.
விளம்பரதாரர்
208, 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(306)

BERLIN
விமான டிக்கட்டுகள்
கொழும்பு — பேர்லின் (BERLIN)
மற்றும் சகல நாடுகளுக்கும் கழிவு விலையுடன்
விமான டிக்கட்டுகள்
AIR LANKA விமானத்தில் ரூபா 13,990/- மட்டுமே.
எமது சேவைகளின் விபரம்;
1. கொழும்பில் இரண்டு நாட்கள் இலவச தங்குமிட வசதிகள்.
2. பிரயாணக் காசோலைகள் (Travellers Cheque) எடுத்துக்கொடுப்பதற்கான இலவச சேவை.
3. விமான நிலையததிற்கு இலவச போக்குவரத்துச் சேவை.
எமது சேவைகளின் முழு விபரங்களுக்கு
உடன் தொடர்பு கொள்ளவும்,
EUROLANKA TRAVELS LTD.,
6 A, Daisy Villa Avenue, Clombo 4 தொ. பேசி: 85990
கிளை: 8th Floor, PAUL VI CENTRE,
Front Street, Colombo - 11 தொ. பேசி; 549495
யாழ் நகரில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;
P. SHANMUGARAJAH,
40, 3rd Cross Street, Jaffna. (308)

EAST BERLIN
செல்வதற்கான விமானச் சீட்டுக்களை மிக விரைவில் பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
LOBETROTTER (Pte) Ltd.
1 St FLOOR, 166, LIBERTY PLAZA, COLOMBO-3.
தொலைபேசி: 573119 / 573120
உங்கள் வசதிக்காக கீழ்க்காணும் இடங்களில்
எமது பிரதிநிதிகள்
நியமிக்கப்பட்டுள்ளார்கள்.
உடுப்பிட்டி — S. T ராஜா
மைதான வீதி, இமயாணன். உடுப்பிட்டி.
சுன்னுகம் — T. சூரியகுமார்
(சட்டத்தரணி) கே. கே. எஸ். ரோட், சுன்னுகம்.
நெல்லியடி கரவெட்டி — T. சிவராசா
169, பங்களா, வதிரி, மாலு சந்தி.
வவுனியா — S. துஷ்யந்தன்
C/o Mrs T. செல்லத்துரை, பண்டாரகுளம், வவுனியா.
மேலதிக விபரங்களுக்கு நேரிலோ அல்லது எமது பிரதிநிதிகளையோ தொடர்பு கொள்ளுங்கள்.
(260)

# சோவியத்தும், சீனவும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்த விருப்பம்!

## இருநாட்டு அமைச்சர்களும் பீக்கிங்கில் சந்திப்பு

பீக்கிங் அக், 19

**உலகின் இரு பெரும் கம்யூனிஸ நாடுகளான சோவியத் யூனியனும் சீனவும் தமக்கிடையேயுள்ளபகைமையைநீக்கி மீண்டும் உறவுகளை வளர்த்துக் கொள்ள இணங்கியுள்ளன.**

தற்போது சீனவுக்கு விஜயம் செய்திருக்கும்சோவியத் பிரதி வெளியுறவு அமைச்சருக்கும், சீனப்பிரதி வெளியுறவுஅமைச்சருக்கும் இடையில் பீக்கிங்கில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு, கலாசாரப்பரிவர்த்தனைஎன்பவற்றில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கும் மற்றும் இருநாடுகளிடையேயும் காணப்படும் பல கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்கும் இருநாடுகளும் இணங்கியுள்ளன.

நீண்டகால இடைவெளியின் பின்னர் 1982ம் ஆண்டு இருநாடுகளும் மீண்டும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பின்னர்தொடர்ச்சியாக ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

ஆயினும் சித்தாந்த வேறுபாடு, எல்லைப்பிரச்னை, அப்கானிஸ்தான், கம்பூச்சிய விவகாரம் சீன எல்லைப்பகுதிகளில் சோவியத் யூனியனின் படைக்குவிப்பு என்பன தொடர்பாக இருநாடுகளிடையேயும் இன்னமும் கருத்து வேற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. (சூ)

## பொருளாதார நோபல் பரிசு

(லண்டன்)

கேம்பிறிட்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த றிச்சாட் ஸ்ரோன் என்பவருக்கு இத்த ஆண்டுக்கான பொருளாதார நோபல் பரிசுவழங்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசு பெறும் நான்காவது பிரிட்டிஷ் நாட்டவர் இவராவார்.

(வெ)

# காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் படைகளை நகர்த்துகிறது!

## இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி அக், 19

'இந்தியாவின் காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் தனது படைகளை நகர்த்தி வருகிறது. பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைகள் மிகப் பெரியதோர் இராணுவ யுத்தத்துக்கு தயாராகிறதுஎன்பதனைகாட்டுகிறது'' என்று இந்தியா தெரிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை ஆதாரமாக வைத்து இந்தியாவின் முக்கிய இரு செய்தி ஸ்தாபனங்கள் இந்தச் செய்தியை தெரிவித்துள்ளன.

இந்தப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் முன்னரும் தனது படைகளை நகர்த்தி வந்த போகும் தற்போது அதிகளவில் இந்தப் படைகள் எல்லைப் பகுதியில் காணப்படுகின்றன. இதனுல் பாகிஸ்தான் இந்தியவுக்குள் ஊடுருவும் சாத்தியம் உண்டு என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்திய படைகள் உஷார் நிலையில் நிறுத்தப்பட்டதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

(சூ)

## உத்தியோக பூர்வமான இ. தொ. கா. கிளை நமதே என்கின்றனர் இவர்கள்!

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் இயங்கி வரும் உத்தியோக பூர்வமான இ தொ. காங்கிரஸ் மாவட்டக் கிளை தமது தலைமையில் இயங்கும் மாவட்டக்கிளைதான் என இ. தொ கா. கிளிநொச்சி மாவட்டக்கிளைத் தலைவர் எஸ் கோபாலும், செயலாளர் எஸ். சபாரத்தினமும், அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளனர்.

இ தொ.கா. வட பிராந்திய பிரதிநிதி திரு எஸ் மநதப்பிள்ளை தலைமையில் தமது தெரிவு சட்டப்படி நடை

(7-ம் பக்கம் பார்க்க)

# பாஸ்போர்ட் விநியோகத்தில் தமிழருக்கு பாரபட்சம்!

## சனசமூக நிலையத்தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்புத்துறை)

பாஸ்போர்ட் விநியோகத்தில் தமிழர்கள் மீது இனரீதியான பாரபட்சம் காட்டப்படுகின்றதென்றும் இதனுல் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் தமிழ் விண்ணப்பத்தாரிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் குடியேற்ற வெளியேற்றத் திணைக்களக் கட்டுப்பாட்டாளரிடம் முறையிடப் பட்டுளளது.

பலாலி தெற்கு வயாவிளான் சென். ஜேம்ஸ் சனசமூக நிலையத் தலைவர் இது சம்பந்தமான மகஜரொன்றை குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பி வைத்துளளார்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, ''பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் போது கிராம சேவை அலுவலரின் நன்சான்றிதழ் பெற வேண்டும். அதனைப் பிரிவு உதவி அரச அதிபர் உறுதிப்படுத்த வேண்டும். பொலிஸாரிடமிருந்து நன்னடத்தைப் பத்திரம் பெறுவதற்கும் கிராம சேவை அலுவலரின் சான்றிதழ் வேண்டும் என்கிருர்கள், இந்த நிபந்தனைகள் எல்லாம் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் தமிழர்களுக்குத்தான். இதனுல் தமிழ் மககள் மிகவும் விசனமும் கவலையும் அடைந்து வருகின்றனர். இக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.''

# எம். ஜி. ஆர். குணமடைய பாஷையூர் அந்தோனியார் ஆலயத்தில் பலி பூஜை

(கொழும்புத்துறை)

'தொழிலாளர் வர்க்கத்தின் வளர்ச்சிக்காகத் தன்னையே தியாகம் செய்து மெழுகுவத்தியைப் போலத் தன்னை உருக்கிப் பிறருக்கு வெளிச்சம் கொடுத்து வாழுபவர் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவரது உடல் நலம் சுகம் பெற இறைவழிபாடு செய்வதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.''

இவ்வாறு முன்னுள் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபரும் பாஷையூர் புனித அந்தோனியார் கோவில் பங்குத் தந்தையுமான வண. பிதா பிரான்சிஸ் அடிகளார் குறிப்பிட்டார்.

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சுகமடைய வேண்டிப் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நடத்தப்பட்டது. திருப்பலிப் பூஜை ஒப்புக்கொடுக்கப்பட்டபின் நாள் முழுவதும் எம், ஜி. ஆரின் நலத்திற்காகப் பிரார்த்தனைகள் நடாத்தப்பட்டன.

வண. பிதா பிரான்சிஸ் அடிகளார் தொடர்ந்து பேசுகையில், ''ஏழைகளின் உள்ளங்களை உண்மை, நேர்மைவழி, தூய நடத்தை ஆகியவற்றுல் கவர்ந்து எல்லோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி வருபவர் தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ராமச்சந்திரன். அவரைப்போல் இவ்வூர் மக்களும் பின்பற்றி நடந்தால் முழுமனிதர்களாக வாழமுடியும்.'' என்று கூறினுர்.

## மறைக் கல்வி விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பெரியவிளான், மாகியப்பிட்டி, அளவெட்டி ஆகிய பங்குகள் இணைந்து நடாத்தும் மறைக் கல்வி விழா இம்மாதம் 23ம் திகதி பண்டத்தரிப்பு பத்திமா ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு பங்குத் தந்தை வண. பிதா. ஜெயக்குமார் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்திரு நீக்கலாஸ் அடிகள் கலந்துகொள்வார்.

இவ்விழாவை முன்னிட்டு மறை அறிவுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் தற்போது நடாத்தப்பட்டுவருகின்றன.

முதலிடம் பெறுபவர்களுக்கு பெறுமதியானபரிசில்கள் விழாவில் வழங்கப்படவிருப்பதாகவும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வயாவிளானுக்கு பற்றிக் அடிகள்

[கொழும்புத்துறை]

அச்சுவேலி — வயாவிளான் பங்குக் குருவாக வண. பிதா. எம் ரி. பற்றிக் அடிகளார் இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். ற்றிக்கின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் டெஸ்ட்: பாக். 9- 428

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே கராச்சியில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கட்டுகளை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றது.

**யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் நற்செய்தி**

பணமாற்றலீடுத்துறையில், இலங்கையின் முன்னேடிகளான, த சென்றல் பினன்ஸ் கம்பெனி பின்வரும் நடைமுறைகளில் சேவையாற்றுகின்றது

★ புதிய/ புதிப்பிக்கப்பட்ட/ பாவித்த வாகனங்களுக்கு பினன்ஸ் வசதி.
★ வாகன காப்புறுதி, ஆயுள் காப்புறுதி. கடல் காப்புறுதி தீ, கொள்ளை, விபத்துக்காப்புறுதி செய்தல்.
★ பண முதலீடுகளுக்கு நிலையான பாதுகாப்பும் உயர்ந்த வட்டியும் வழங்கப்படுகிறது.

**த சென்றல் பினன்ஸ் கம்பெனி லிமிட்டெட்,**
250, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24360

**வெளிநாடு செல்வதற்கு**

★ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, SINGAPORE AND MALAYSIA
ZAMBIA SINGLE FARE RS 15717/-
RETURN RS 31434/-
சம்பியாவுக்கு ஒரு வழி ரூபா 15717/-
இருவழி ரூபா 31434-/
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
(வங்கியின் கட்டணத்தில்) வாரநாட்களில் காலை 8 30 முதல் 4-30 வரை பெற்றுக்கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30
★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

**மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.**
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154

### மணிவாக்கு

மலரிலிருந்து கனிவளர்ந்து வெளிப்பட்டதும் மலரின் இதழ்கள் தாமே கழன்று விழுந்து விடுகின்றன. அதுபோன்று உன்னிடத்துள்ள தெய்வீக இயல்பு அதிகரிக்கும் பொழுது மனித தோஷங்கள் தாமே தம் போக்கில் யாவும் மறைந்துபோய்விடும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

# பட்டினி ஒழிக்கப்படுகிறதா?

ரோமாபுரியில் அமைந்திருக்கும் உணவு விவசாய தாபனம் 39 வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்டது, இன்று ஐ. நா.வின் முக்கிய உபஸ்தாபனமாக விளங்குகின்றது.

உலக உணவு தினத்தை வருடா வருடம் இத்தேதியிலே - அக்டோபர் 16 - கொண்டாடுவது வழக்கமாய்விட்டது.

இத்தாபனத்தின் இன்றைய வருடாந்த அறிக்கை பட்டினி ஒழிப்பில் பெரும் முன்னேற்றங்கண்டதாகக் கூறவில்லை.

கடந்த இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் உணவுத் தட்டுப்பாடு இந்த நாட்டை ஆக்கிரமித்த போது ''பெண் பாலாரும் பெரும் பயிர் செய்யலாம்'' என்ற சுலோகம் சுவர்களில் எழுதப்பட்டதும், கோஷம் எழுப்பப்பட்டதும் நினைவிற்கு வருகின்றது.

இதனால் உணவு உற்பத்தி எவ்வாறு பெருகினதென்பதை நாமறியோம். ஜனப் பெருக்கம் உண்டானது இந்த ஆலோசனையை செவ்வனே புரியாததால் என்பதும் தெளிவற்ற கருத்து.

அது என்னவானாலும் நாம்குறிப்பிடும் (FAO) அறிக்கை இன்று உலக உணவு அதிகரிக்க, குறிப்பாக வறட்சி மிகுந்த ஆபிரிக்க நாடுகளில் இப்பணி வெற்றிபெற பெண்கள் தீவிரமாக உழைக்கவேண்டுமென்று கோருகிறது.

அறிக்கையின்படி உலகத் தொழிலாளிகளில், மூன்றில் ஒரு பங்கே பெண்கள்; ஆனால் மூன்றில் இரு பங்கு தொழில்புரியும் நேரம் அவர்களுடையது.

குடும்பப்பணியுடன் உழைக்கும் அவசியமும் பெண்களுக்குண்டானதால் அவர்கள்படும் கஷ்டம் தாங்கொணாதது.

பெண்கள் கல்வி, தொழில் அந்தஸ்து- இவையெல்லாம் உயரவேண்டுமென்று ஒரு பத்து வருட கால எல்லையை ஐ. நா ஒதுக்கியிருந்தும் இதுவரை உருப்படியான முன்னேற்றம் காணாதகட்டத்தில் அவர்களுடைய பொறுப்பை அதிகரிப்பதால் நல்ல பலனுண்டாகுமா?

உழைத்தோ உழையாமலோ குடும்பநலத்தை, பிள்ளைகளின் சுகவாழ்வை பெரும் பொறுப்பாகக் கொண்ட பெண்குலம்; ஆண்களின் உழைப்பால் உலக ரீதியில் மேம்பாடு அடையுமென நம்ப இடமில்லை.

பட்டினியைச் சமாளிக்கும் பெரும் பொறுப்பு பெண்ணைப் பொறுத்ததே. எங்கள் நாடுகளில் மட்டுமல்ல ஆபிரிக்க ஐரோப்பிய தேசங்களிலும் இதனை நாம் கவனிக்க முடிகிறது.

உலகத்தை பட்டினியிலிருந்து பாதுகாக்கும் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் உணவு விவசாய தாபனம் இதில் பெரு வெற்றி கண்டதாகக் குறிப்பிடவில்லை.

உலக ஜனத் தொகையின் அரைவாசி கிழக்கு ஆசியாவில் காணப்படுகிறது; இங்கு உணவுப் பெருக்கம் ஜனப் பெருக்கத்துடன் போட்டிபோட முடியாதிருக்கின்றது.

விவசாயத் துறையில் பிரயோகப்படுத்தப்படும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் — நீர்ப்பாசன வசதிகள், விஞ்ஞான முறையில் தயாரிக்கும் உரம், விதை நெல் ரகமும், பயிர் கொல்லி போன்ற மருந்து வகைகளும் — இவை யாவும் உணவு உற்பத்திக்கு உறுதுணையாய் விட்டன.

உற்பத்தித் துறையில், இலங்கை போன்று பல நாடுகள் துரிதமாக முன்னேறுகின்றன. இலங்கையின் உணவு உற்பத்தியை குறிப்பிடும் போது இன்று நூற்றாண்டு விழாக் காணும் முதற் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா, அவருடைய புதல்வன் பிரதமர் அமரர் டட்லி சேனநாயக்கா பசுமைப் புரட்சிக்கு பல திட்டங்கள் திறம்பட இயங்க வழிவகுத்த பெரியாரென்பதையும் குறிப்பிட வேண்டும்.

இதில் என்ன விபரீதம் என்பதையும் நாம் உணர வேண்டும்; உலகில் உற்பத்தியாகும் உணவு உலகனைத்துக்கும் பட்டினியை ஒழிக்க போதுமானது; ஆனல் அதனை விநியோகிக்கும் முறை தவறானது.

இதனை நாம் எங்கள் நாட்டில் மிகத் தெளிவாகக் காணமுடிகிறது.

நெல் உற்பத்தி நாட்டின் தன்னிறைவுக்குபோதுமானதோடு ஏற்றுமதிக்கும் உண்டென்ற பிரசாரம் காதைப் புளிக்க வைக்கிறது.

முன்னொரு முறை நாம் பட்டினி கிடக்க ஐ.தே.கட்சி ஆட்சி நெல் ஏற்றுமதி செய்ய எத்தனித்தது இன்று பட்டினியால் வாடும் தன்ஸேனியாவுக்கு நெல் ஏற்றுமதி செய்திருக்கிறது.

நாட்டில் பாணுக்கே வழியற்று பட்டினி வயிற்றுடன் படுக்கும் பேர் எத்தனை? நாட்டின் அரைவாசிக்கு மேற்பட்ட ஜனத் தொகையினர் போதிய உணவின்றி வாடுகின்றனர்.

இன்றைய வாழ்க்கைச் செலவின் ஏற்றத்தாழ்வு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் மிஞ்சும் உணவுக்கு எத்தகைய அடிபிடி? என்பதில் தெரிகிறது.

பசியில் மிருகங்களுடன் எச்சில் உணவுக்கு போட்டி போடும்நிலை நீங்காத வேளையில் நாம் வருங்காலத் திட்டங்களின் மகிமை பேசி காலங்கழிக்கின்றோம்.

உற்பத்தி பெருகிய நிலையில் உணவு விநியோகத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வு என்ன வகையில் நீக்கலாமென்ற வினாவுக்கு இலங்கை அரசு மட்டுமல்ல பல நாடுகள் விடை காணவேண்டும்.

அறுசுவை உண்டியை சுவைத்து கொண்டாடும் மிகச் சிலர் பட்டினித் திண்டாட்டத்தில் சாகுந்தனைக்கும் தண்டனை அனுபவிப்பதா?

மனிதனின் சமுதாய மனச்சான்று உயிர்த் துடிப்புடையதானல் பட்டினி வாழ்வுக்கு சாவுமணி அடிக்க முடியும்.

# இடைத்தேர்தல் முடிவுகள்: வேறுபட்ட வியாக்கியானங்கள்

## இங்கிலாந்து நிகழ்ச்சியும் அமைச்சரின் அறிவுரையும்!

இடைத் தேர்தல் பிரசாரங்கள் உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டங்கள் சிலவற்றில் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமாகிய திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொண்டு பேசியிருக்கிறார். பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவும் மற்றும் முக்கிய அமைச்சர்களும் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள்.

வடபகுதி பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவோம் என்பதுதான் ஆளும்கட்சியினரின் பிரசாரத்தில் முக்கிய அம்சம். இங்கிலாந்தில் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சரையும், அவரது முக்கிய அமைச்சர்கள் பலரையும் அவர்களின் கன்சர் வேட்டிவ் கட்சியின் மாநாடு நடைபெற்ற பிரைட்டன் ஹோட்டலில் குண்டு வைத்து வெடித்துக் கொலை செய்ய அயர்லாந்து பயங்கரவாதிகள் சில தினங்களுக்கு முன் மேற்கொண்ட முயற்சியைப்போல் இங்கும் பயங்கரவாதிகள் முயற்சிகள் மேற்கொள்ளக் கூடுமென்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன எச்சரிக்கை செய்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து சுதந்திரக் கட்சி அரசு வெளியேற்றிய இஸ்ரேலியரை இந்த அரசு மீண்டும் இலங்கைக்கு கொண்டுவந்திருக்கிறதென்றும், இதனால் இங்குள்ள முஸ்லிம்கள் இந்த அரசின்மீது அதிருப்தி அடைந்துள்ளனரென்றும் கூறும் சுதந்திரக் கட்சிப்பிரமுகர்களும் எதிர்க் கட்சித் தலைவருமான திரு அனுரா பண்டாரநாயக்கா அரசுக்கு எதிராக மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தித் தாங்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை உணர்த்தி அரசைக் கண்விழிக்கச் செய்யவேண்டுமென்கிறார்.

### எஸ். எம். ஜி.

ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி வேட்பாளர்களை இடதுசாரிக் கட்சிகள் ஆதரிக்கின்றன. இக்கட்சிகளும் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இரகசியமாகத் தமக்குள் ஒத்துழைத்துக் கொள்கின்றனவென்று கேட்கின்றன.

இந்த அரசாங்கம் மக்களின் சகல சுதந்திரத்தையும் பறித்துவிட்டதென்றும் இப்பொழுது இங்கு அவர்களுக்கு எந்தச் சுதந்திரமே இல்லையென்றும், நவ சமசமாஜிக் கட்சித் தலைவர் திரு வாசுதேவா நாணயக்காரா விளக்கமாகக் கூறுகிறார்.

இதே சமயம் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பொது சன சாதனங்களின் மறைமுகமான பிரசாரங்கள் வேறு!

### தேர்தல் முடிவுகளின் விளைவு என்ன?

இந்த இரண்டு இடைத்தேர்தல்களில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்ருல் தங்கள் அரசின் கொள்கைகளுக்கும் நாட்டின் அபிவிருத்திக்காகத் தாங்கள் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு மக்கள் அங்கீகாரம் அளித்து விட்டதாகவும் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவும் பயங்கரவாதத்தை ஒழிக்கவும் தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும் அரசாங்கமும், ஐக்கியதேசியக்கட்சியும் விளக்கம் கூறும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்ருல் இந்தஅரசின் செயல்களினல் மக்கள்படும் கஷ்டங்களை இந்த இடைத்தேர்தல் மூலம் மக்கள் அரசுக்கு உணர்த்திவிட்டனரென்றும் இந்தஅரசு உடனடியாகவே ராஜிணமாச் செய்து மக்கள் தாம் விரும்பிய அரசைத் தெரிவுசெய்வ

(5ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

# இலங்கையின் தேசபிதா டி. எஸ். நினைவுதினம்

இன்று இலங்கையின் முதலாவது பிரதமரும், தேசபிதாவென்று போற்றப்படுபவருமான திரு. டி. எஸ். சேனநாயக்காவின் பிறந்த தினம்.

சாணக்கியமும் அரசியல் தந்திரமும் மிக்கவராக விளங்கிய திரு. சேனநாயக்க தமிழர் பிரச்னையை நாசுக்காகவும் தந்திரமாகவும் தீர்த்து வைக்க முனைந்தவர்.

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் எவருக்கும் நோகாமல் காரியம் சாதிப்பதில் அவர் சமர்த்தர்.

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையோரில் ஒரு பிரிவினரான மலையக மக்களின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது ஏனைய சிறுபான்மைத் தலைவர்களை அவர் மிக சாதுர்யமாகத் தம்பக்கம் ஈர்த்துக் கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில்திட்டமிட்ட குடியேற்றங்களைப்புகுத்தியதிலும் அவருக்கு அதிக பங்குண்டு. அதே சமயம் இந்த நாட்டின் விவசாயத் துறை மேம்பாடு அடைவதற்கு அவர் ஆற்றிய பங்கு அனந்தம்.

சிங்கள அரசர் காலத்துக் குளங்களையெல்லாம் புதுப்பித்து நவீன நீர்ப்பாசனத்துக்கு வழிவகுத்தவரும் அவரே. அவரது கொள்கைகளையே இன்றைய யு. என். பி. அரசும் கடைப்பிடிக்கின்றது என சிலர் கருதுகிறார்கள். ஆனல் அவர் உயிருடனிருந்திருப்பாரானல் இன்றைய நிலைமை தோன்ற இடம் தந்திருக்க மாட்டார். சகல இனத்தவர்களையும் தம்மோடு இணைத்துக் கொண்டு கட்சியையும் கட்சிக் கொள்கையையும் முன்னேற்றி வந்திருப்பார்.

சுதந்திரம் கிடைத்தவுடன் 1948ம்ஆண்டுஇலங்கையர்யாவரும் பிரஜைகள்பிரிட்டிஷ்என்ற நிலையிலிருந்து விடுபட்டோம். இதையடுத்து திரு. டி. எஸ். சேனநாயக்க இந்தியர் - பாகிஸ்தானிர் பிரஜாவுரிமை சட்டத்தைக் கொண்டுவந்தார். இச்சட்டத்தின்முலம் இந்திய வம்சாவளியினருக்கு இருந்து வந்தக் குடியுரிமை பறிக்கப்பட்டதுடன் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் பறிபோயிற்று

திரு. சேனநாயக்க இவ்வாறு செய்வதற்கு அவருக்கு இந்தியர்கள் மீதிருந்த வெறுப்பல்ல காரணம். அவர்கள் பெரும்பாலும் பாட்டாளிகள், எனவே இவர்களின் வர்க்க உணர்வு தமது கட்சிக்கும், கொள்கைக்கும் மாருகவே இருக்கும் என்றும், தமது கட்சி தொடர்ந்து பதவியிலிருப்பதை இது பாதிக்கும் என்றும் அவர்கருதியதே முக்கிய காரணமாகும்.

1947-ல் நடந்த பொதுத் தேர்தலில் இந்த மக்கள் தமக்கென ஏழு உறுப்பினர்களை (இலங்கை இந்திய காங்கிரஸ்) தெரிவு செய்தது மட்டுமல்ல இடதுசாரிகள் பலர் தெரிவாவதற்கும் காரணமாய் இருந்தனர்.

இலங்கை இந்திய காங்கிரஸும் பாராளுமன்றத்தில் ஐ. தே. கட்சி அரசுக்கு எதிராகவே செயல்பட்டது.

இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் தமிழரும் சிங்களவரும்இணைந்தே செயல்பட்டனர். அதுமட்டுமல்ல, 1915ம் ஆண்டளவில் ராணுவச் சட்டம் அமுலில் இருந்த சிங்களத் தலைவர்கள் குறிப்பாக திரு டி.எஸ்.சேனநாயக்க போன்ரோர் கைது செய்யப்பட்ட போது அவர்களை விடுவிபபதற்காக சேர் பொன்னம்பலம் ராமநாதன் நீர்மூழ்கிக் கப்பல்களால் ஏற்படக்கூடிய அபாயத்தையும் உதாசீனம் செய்து விட்டு கப்பல் மார்க்கமாக இங்கிலாந்து சென்று பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் விவாதத்தமை பிரபல்யமான ஒருசம்பவம். 1919ம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவர் சேர் ராமநாதனின் சகோதரர் சேர் பொன்னம்பலம் அருணசலமாவார். சட்ட சபைக்கு படித்த இலங்கையர் தொகுதியில் பெரும்பான்மையோர் சிங்களவராக இருந்தும் இருதடவை வெற்றிபெற்ருர்.

பிரிட்டிஷ் அரசாங்கம் தொடர்ந்தும் பல சலுகைகள் அளிக்கத் தொடங்கியதால், இந்த சலுகைகளை அனுபவிப்பதில் போட்டியேற்பட்டது.

இதனுல் ஏற்பட்ட மனக்கசப்பினுல் பொன்னம்பலம் சகோதரர்கள்இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து விலகினார்கள்.

பின்னர் வந்த டொனமூர் அரசியல் திட்டம் இனவாதம் வளர்வதற்கு உதவுவதாய் அமைந்தது.

(5ம் பக்கம் பார்க்க)

# “கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பணியகத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களைத் திருப்பி ஒப்படைக்கவும்”

## பணிப்பாளர் வேண்டுகோள்

[கிளிநொச்சி]

“கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணியகத்தில் அண்மையில் இரண்டு தமிழ் தட்டச்சு இயந்திரம், போட்டோஸ்ரட் பிரதி பண்ணும் இயந்திரம் என்பன கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மேற்படி நிலையத்தின் பணிப்பாளர் திரு. என். சபாரத்தினம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளதாவது:

“முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ஒரு தொடர்பு நிலையமாகவே இந்த நிலையம் இயங்கி வந்தது. மேற்படி கொள்ளை இடம்பெற்றதன் காரணமாக இங்கு செய்யப்பட்டு வந்த தமிழ்மொழி ரீதியான சகல வேலைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இதனால் பல மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மேற்படி பொருட்களை கொள்ளையடித்தவர்கள் அதனைத் திருப்பி ஒப்படைத்தால் இந்த திணைக்களத்தின் வேலைகளை மீண்டும் மேற்கொள்ள முடியும்.”

# இடைத்தேர்தல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்குதச் சந்ர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்கும்.

ஸ்ரீலங்கா மக்கள்கட்சிவேட்பாளர் வெற்றிபெற்ருல் தங்கள்கட்சியின் கொள்கைக்கு மக்கள் அங்கீகாரம் அளித்து விட்டார்களென்றும் இடதுசாரி மக்கள் கட்சிக்கூட்டணி பலம் வாய்ந்த சக்தியாகுமென்றும் அரசாங்கம் பதவி விலகி மக்கள் முன் செல்ல வேண்டுமென்றும் சவால் விடுக்கலாம்!

ஆனாலும் இப்போதுள்ள நிலையில் ஆட்சியில் எந்தவித மாற்றமும் ஏற்படும் சாத்தியமில்லை.

### ஆங்கிலேயர் பற்றிஅத்துலத்

“பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சரையும் அவருடைய அமைச்சர்களையும் கொலைசெய்ய ஐரிஷ் பயங்கரவாதிகள் தான்முயற்சி செய்தார்களென்று தெரிய வந்தபோதும் ஆங்கிலேயர் அவர்கள் மத்தியிலுள்ள ஐரிஷ் பிரஜைகளைப் பழிவாங்கவில்லை கலவரம் அடையவுமில்லை. இது எமக்கு ஒருபாடமாகும்” என்று தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்திருக்கிருர்.

இக் கொலைமுயற்சியைபிட்டு ஆங்கிலேயர் ஆத்திரம் கொண்டனர் ஆனுல் அவர்கள் கலவரமடைந்து குழப்பம் விளைவிக்கவில்லை அவர்கள் மத்தியில் வாழும் ஐரிஷ் மக்களைப்பழிவாங்கவில்லை இப்படியாக இவர்கள் நடந்து கொண்டுள்ளார்கள். இதை எமது மக்கள் உணர்ந்து இனி செயற்பட வேண்டும்” என்று அமைச்சர் அத்துலத் முதலி விளக்கமாக கடந்த சனிக் கிழமை மாலை நடந்த ரம்புகணையில் நடந்த மகாபொல விழாவில் பேசுகையில் கூறியிருந்தார்.

### படையினரும் பழிவாங்கவில்லை!

ஐரிஷ் மக்களின் போராட்டத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இப் போது தான் முதல் தடவையாக நடைபெறவில்லை பல உயிர்களைக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பலி கொண்டிருக்கின்றன. பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் பலரைப் போராளிகள் பலி வாங்கியிருக்கின்றனர். உச்சக் கட்டமாக மவுண் பேட்டன் பிரபுவின் உயிரைக்குடித்ததும் ஐரிஷ் தீவிரவாதிகளின் குண்டுகள்தான்!

இத்தனைக்கும் பிரிட்னிடின் பாதுகாப்புப்படைகள் எந்தச் சந்தர்ப்பத்தில வது அப்பாவி மக்களைத் தாக்கவில்லை வீதியோரங்களிலுள்ள வீடுகளில் புகுந்து நித்திரையிலிருந்தவர்களை எழுப்பிச் சுட்டுக் கொன்று பழிதீர்த்துக் கொள்ளவில்லை. கடைகளையும் கல்வி நிலையங்களையும் தீ வைத்துக் கொழுத்தவில்லை. ஐரிஷ் “பயங்கரவாதிகளுடன்”, தான் பிரிட்டிஷ் பாதுகாப்பு படைகளுக்குப் போராட்டமே தவிர பொது மக்களுடனல்ல!

### படைகள் பற்றி வண. ராகுல

சர்வமத மாநாட்டுச் செயலாளர் நாயகம் வண.வல்பொலராகுல சில மாதங்களுக்கு முன்னர் ஒரு வைபவத்தில் பேசுகையில் ஐரிஷ் போராட்டம் பற்றியும் பிரிட்டிஸ் பாதுகாப்புப்படைகளின் நடத்தை பற்றியும் குறிப்பட்டு பிரிட்டிஸ் பாதுகாப்புப் படைகள் ஐரிஷ் தீவிரவாதிகளின் செயல்களுக்காக ஐரிஷ் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதில்லையென்று வட பகுதியில் இராணுவத் தாக்குதல் சம்பவத்தையடுத்து விளக்கம் கொடுத்தார்!

ஆனாலும் என்னஅதன்பின் எத்தனையோ அப்பாவிகள் வீதிகளிலும் வீடுகளிலும் மழிவாங்கப்பட்டுள்ளனர். பல கட்டிடங்களும் சொத்துக்களும் தீக்கிரையாகி யிருக்கின்றன! அமைச்சர் அத்துலத்முதலி பிரிட்டிஸ் மக்களைப் பற்றிச் சொல்லியிருக்கிருர். பிரிட்டிஷ் பாதுகாப்புப் படையினர் பற்றித் தமது பாதுகாபபு படையினருக்குச் சொன்ஞரோ தெரியவில்லை!

### இதுதான்சந்திக்க மறுக்கக் காரணமோ!

சர்வமத மாநாட்டுச் செயலாளர் நாயகமோ, சர்வமத சபையோ என்ன சொன்னலும் அரசதரப்பிலும் ஆயுத படைகள் தரப்பிலும் எதுவும் செயல்படுத்தப்படுவதில்லையென்ற காரணத்தினுல் தானே சென்னை சென்றுள்ள சர்வமத சபை சமாதானக் குழுவைச் சந்திப்பதற்கு இலங்கைத்தமிழர் தீவிரவாதக் குழுக்கள் மூன்று மறுத்து விட்டனவோ?

## கச்சதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக்கொள்ளுமாறு இந்திய மத்திய அரசைக் கோரும் தீர்மானமொன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு பிரிவின் மாநில மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வெ)

## டி. எஸ்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

1936ம் ஆண்டு திரு டி.எஸ். சேனநாயக்க2 ஆவதுஅரசாங்க சபைக்கு சிறுபான்மை இனத்தவர்கள் எவரையும் சேர்த்துக் கொள்ளாது அமைத்த சிங்களவர்கள் மட்டும் அடங்கிய அமைச்சரவையினுல் சிறுபான்மை மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டது. இதையடுத்து அரசியலில் வகுப்பு வாதம் புகுந்தது. தெற்கில் சிங்கள மகாசபா உருவாயிற்று. திரு எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அதனை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த ஆரம்பித்தார். வடக்கில் அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் திரு ஜி. ஜி பொன்னம்பலத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட இர் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

60 க்கு 40 என்ற விகிதத்தில் அரசியல் சாசனத்தில் சிறுபான்மையோருக்கு உரிமை வழங்குவதுபற்றி திரு சேனநாயக்க ஆலோசித்த போதிலும் திரு பொன்னம்பலம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லையென்று ஒரு கதையுண்டு

இதையடுத்து சோல்பரி கமிஷன் வந்தது திரு சேனநாயக்க இந்தக் கமிஷனின் முன் தோன்றி சாட்சியமளிக்காது போனுலும் தனிப்பட்ட முறையில் கமிஷனரைச் சந்தித்த தமது கருத்துக்களைக் கூறுவதற்குத் தவறவில்லை.

சோல்பரி கமிஷன் 50க்கு 50 கோரிக்கையை நிராகரித்து விட்டது.

ஆனுல் ஓராண்டு காலத்துக்குள் தமிழ்த் தலைவர்களை அரசுடன் ஒத்துழைக்கும்படி செய்வதில் டி எஸ்.வெற்றி பெற்ருர். திரு பொன்னம்பலம் டி எஸ்.அமைச்சரவையில் சேர்ந்தார்.

திரு எஸ் ஜே வி.தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

-பெ-

## மாதகல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாதகல் கடற்கரையோரத்தில் உள்ள மீன்வாடிகள் தீவைக்கப்பட்டதால் முற்ருக எரிந்து விட்டதாகவும் அப் பகுதியில் உள்ள வீடுகளின் தளபாடங்கள், கண்ணுடி யன்னல்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் நொறுக்கப்பட்டதாகவும் புகார் தெரிவிக்கப் படுகிறது. இரவு நேரத்தில் கடல்பகுதியில் பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டதாகவும் துப்பாக்கிச் சூடட்டு சத்தங்களும் இடைக்கிடை கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மதகல் நுணசை முருக மூர்த்தி கோவிலுக்கருகாமையில்முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் தொடர்ந்து தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

### எழுத்தாளர் கைது

எழுத்தாளர் ‘மாதகல் செல்வா’ என்பவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாதகல் பகுதியில் இராணுவத்தினர் சோதனை நடத்திய பொழுது எழுத்தாளர்ன்வீடும் தீவிர சோதனைக்குள்ளானது.

அவரது வீட்டில் தீவிரவாத இயக்கங்களினுல் வெளியிடப்பட்ட பிரசுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### மதகுரு விடுதலையானர்

மாதகல் நுணசை முருக மூர்த்தி கோவில் குருவான பாலசுப்பிரமணிய ஐயர் இராணுவத்தினரால் விசாரணைக்காகஅழைத்துச்செல்லப்பட்டு, பின்னர் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

வெளியிடங்களிலிருந்துசெல்லும் வாகனங்கள் எதுவும் மாதகல் பகுதிக்குச் செல்லாதவாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது. பண்டத்தரிப்புச் சந்தியில் வைத்தே வாகனங்கள் சோதனையிடப்பட்டு திருப்பி விடப்படுகின்றன.

துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் மாதகலைச் சேர்ந்த தேவதாஸ் குரூஸ் [22 வயது] என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை மாதகல்பகுதியில் ஆயுதப் படையினர் சோதனை மேற்கொண்டபோது இவ்விளைஞருக்கு கையில் துப்பாக்கிச்சூடுபட்டு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இளவாலையிலுள்ள அன்னை மாதா தேவாலயத்தில் கடந்த புதன்கிழமை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது கண்ணுடிப் பெட்டிக்குள்ளிருந்த புனித. நீற்றம்மா சொரூபத்தில் துப்பாக்கிக்குண்டுகள் தாக்கி, ஒருபாகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் திருப்பாடுகள் சிலுவை சொரூபமும் சேதமடைந்துள்ளதாகவும் தேவாலய பங்குக் குருவானவர் புகார் செய்துள்ளார்.

ஆலயத்துக்குச் சொந்தமன மாதா அணிகலன்களான நகைகள், ரொக்கப் பணம் ஆகியனவும் காணுமல் போனதாகவும் அப்புகாரில் தெரிவித்திருந்தார்.

இதுசம்பந்தமாகப் பின்னர் கிடைத்த தகவல்களின்படி காணுமல் போன ரொக்கப் பணமும் நகைகளின் ஒருபகுதியும் சம்பந்தப்பட்டவர்களால் திருப்பிப் பங்குக்குரவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இளவாலையில் சோதனை மேற்கொண்டிருந்போது இனந்தெரியாத நபர்கள் இராணுவத்தினரை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்ததும், அதில் ஓர் இராணுவவீரர் ஸ்தலத்திலேயேபலியானதுடன் மேலும் ஒரு இராணுவ வீரர் காயமுற்றதும் தெரிந்ததே. அதனைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட தேவாலயம் உட்பட சுற்றுடல்புறங்களில் கடும் சோதனை நடந்தது.

இளவாலை புனித. ஹென்றி அரசர் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதியிலுள்ளமணவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் விடுதியிலுள்ள மாணவர்களின் உடுப்புவகைகள், மணிக்கூடுகள் ஆகியனவே காணுமல்போனதாக கூறப்படுகிறது.

சென் ஹென்றீஸ் பாடசாலை மாணவர்கள் சிலரும் தாக்கப்பட்டதாக அதிகாரிகளுக்கு புகார்செய்யப்பட்டுள்ளது.

(மா)

## இடைஞ்சல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டனர்.

திரு சமரக்கோன் தமக்களிக்கப்பட்டபிரியாவிடைக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:

புதிய அரசமைப்பின் கீழ் 1978-ம் ஆண்டு இந்த உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டது அரசமைப்பின் முக்கிய அம்சம் அடிப்படை உரிமைகள் பற்றியதாகும் அந்த உரிமைகளின் பாதுகாவலனுக உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டது இந்த உரிமைகளை நிலைநாட்டும் நடவடிக்கைகளின் போது முற்றிலும் துர்ப்பாக்கியமானதும், எதிர்பார்க்கப்படாதது மான விளைவுகளை உயர்நீதிமன்றம் எதிர் கொள்ள நேர்ந்தது இதில் ஒன்றுதான் மூன்று நீதியரசர்களின் வீடுகளுக்கு முன் பகிரங்கமாக நடத்தப்பட்ட அச்சுறுத்தல், இன்னென்று பிரஜை ஒருவரின் அடிப்படை உரிமைகளை மீறியதாக ஒரு பொலிஸ் அதிகாரி இந்த நீதிமன்றத்தினுல் குற்றம் காணப்பட்டதையடுத்து அவ்வதிகாரிக்கு பதவி உயர்வு கொடுத்து பரிசளிக்கப்பட்டதாகும்.

இருந்தபோதிலும் இந்த நீதிமன்றம் அந்த உரிமையைச் செயல்படுத்தியே வந்துள்ளது தொடர்ந்தும் அவ்வாறே செய்யும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை அச்சமின்றி செயல்பட்டு வரும் சட்டத்தரணிகளும் இதற்கொரு அரணுக இருந்து வருகிருர்கள். (இ)

## எம். ஜி. ஆர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டார் இவர் திருமதி ஜானகி ராமச்சந்திரனையும் சந்தித்து முதல்வரின் உடல்நிலை குறித்துக் கேட்டறிந்துகொண்டார்.

### பார்வையாளர் அனுமதியில்லை

முதலமைச்சரைப் பார்வையிடப் பார்வையாளர்கள் எவரும் நேற்று அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகை நிருபர்கள் காலை 8-30 மணிக்குப் பின் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

### சிவாஜி பிரார்த்தனை

முதலமைச்சர் விரைவில் குணமடையவேண்டுமென்று சென்னை முருகன் ஆலயத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விசேட பிரார்த்தனையொன்றை நடத்தினுர்.

முதல்வர் விரைவில் குணமடையவேண்டுமென்று இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

### இலங்கைஅகதிகள்

முதலமைச்சரின் உடல்நிலை குறித்து மண்டபமுகாமிலுள்ள இலங்கை அகதிகள் முகாமிலும் பிரார்த்தனை நடத்தப்பட்டது

### “தீக்குளிக்க வேண்டாம்”

முதலமைச்சரின் உடல்நிலை தேறிவருவதால் தீக்குளிப்புப் போன்ற சம்பவங்களில் ஈடுபட வேண்டாமென்று பொதுமக்கள் மீண்டும் கேட்கப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் விரைவில் பூரண குணமடைய வேண்டுமென்று பிரார்த்தித்து ஆலயங்களில் விசேட பூஜைகளும், பள்ளிவாசல்களில் விசேட தொழுகைகளும், தேவாலயங்களில் பிரார்த்தனைகளும் நேற்று இடம்பெற்றன.

[வெ]

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங்,
2–வது மாடி, கொழும்பு–1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—4(20-10-1984)
வாரம்—சனி
திதி—தசமி காலை6-2ன்பேல் ஏகாதசி
நக்ஷத்திரம்—மகம் முன் இரவு11-45வரை

மேடம்:- நினைத்தது நடக்கும் பந்து சனங்களின் கொண்டாட்டம் உண்டு பிதா வழி மூலம் எதிர்பாராத பொருள் வரவும் கிடைக்கலாம்.

இடபம்:- வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு புதிய முயற்சிகள் இன்று கைகூடும் செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

மிதுனம்:- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கலைதாக்கும் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்

கடகம்:- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும் பணவிவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம் தொழில் துறையில் கவனம் செலுத்தவும்.

சிங்கம்:- இன்று உடல் நிலை சிறிது பாதிக்கப்படலாம் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் கடமையாற்றும் இடத்தில் கவனம் வேண்டும்.

கன்னி:- பேச்சு வன்மையினல் பெரும் புகழ் கிடைக்கும் பெரிய இடத்துச் சகாவசம் உங்களுக்குச் செல்வாக்கை தேடித்தரும்.

துலாம்:- அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடம் உண்டு மௌனம் வேண்டும்.

விருச்சிகம்:- மாணவர் வாழ்க்கையில்மகிழ்ச்சிகரமான தினம் கல்வித் துறையில் முன்னேற்றம் உண்டு தாய்வழி ஆதரவு தாராளம்உண்டு

தனுசு:- வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு பெரிய இடத்து தொடர்பு பெருமையை தேடித்தரும்.

மகரம்:- அன்னிய வாசம் அமைதிக்கு உலை வைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

கும்பம்:- குடும்பத்தில் குதூகலம் தவழும் களஸ்திரவழியால் நன்மைகளுக்கும் இடமுண்டு பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்.

மீனம்:- அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் சிலர் வாழ்க்கையில் பொருள் முடக்கம் ஏற்படலாம் நண்பர்களால் தொல்லைகள் தோன்றக் கூடும்.

திருமலை
வே.ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை

5-30 கார்ட்டூன் சித்திரம்
5-55 சிறுவர் நிகழ்ச்சி
6-25 எகிப்திய பிரமிட்டுகள்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 நிகழ்ச்சி தொடர்
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 டி. எஸ். சேனநாயக்கா பற்றிய சித்திரம்
9-05 தமிழ் வாத்திய விருந்து
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 'சமா' நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 'சமா' நிகழ்ச்சி தொடர்
10-55 ஒளி பரப்பு முடிவு

## இன்று

(மாவிட்டபுரம்)

கீரிமலை சிவநெறிக்கழகத்தாரால் நடாத்தப்பட்டசைவ சமய அறிவு விஞடி விஞப் போட்டியிலும் செயல்முறைப் போட்டியிலும் பரிசுபெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் இன்று கீரிமலை நகுலேசுவரர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## 62 யுவதிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

குடும்பநலன் பேணல் வருமானத்தை உயர்த்துவதற்கான மகளிர் தலைமைத்துவப் பயிச்சிக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 12ம் திகதி நயிஞதீவில் நடைபெற்றது.

நயினைநாகபூஷணி அம்பாள் ஆலய கல்யாணமண்டபத்தில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சை மூலம் 62யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மகளிர் விவகார அமைச்சும் யாழ். திட்டமிடல் பணிமனையும் இணைந்து நடத்தும் இப் பயிற்சிக்கான நேர்முகப்பரீட்சைக்குழுவில் யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. செ. சுவாமிநாதன் வேலணை மகளிர் பணியக அபிவிருத்தி அலுவலர் திருமதி ப. சிவநேசம், வேலணை உதவிஅரசாங்க அதிபர் திரு. குலசேகரம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இப் பயிற்சி பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் 24 தினங்கள் நடைபெறும். இப்பயிற்சியில் தேறுபவர்கள் வீட்டிலிருந்துகொண்டே சுயதொழிலில் ஈடுபடுவதற்குஉதவும்வகையில்ஒவ்வொருவருக்கும் 1500 ரூபா வழங்கப்படும்.

### தொலைக்காட்சி பார்ப்பதை

# தந்தைகண்டித்தார் மகள் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

கடந்த வருடம் பரீட்சையில் சித்தி பெருத மாணவி ஒருவர் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்ததை தந்தை கண்டிக்கவே அம் மாணவி நஞ்சுத்திராகவம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மானிப்பாயைச் சேர்ந்த 19 வயதான எம் காஞ்சனு என்பவரே தற்கொலை செய்த மாணவியாவார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினர். சாரதியான தந்தை சம்பவம் நடந்ததினமிரவு வீட்டிற்கு வந்தபோது மகள் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருந்ததாகவும், கடந்த வருடமும் பரீட்சையில் சித்திபெறவில்லையென்றும், கல்வியில் கவனம் இல்லையென்றும் தந்தை கண்டித்ததாகக் கூறப்படுகின்றது.

இதனுல் கவலையடைந்த மகள், நச்சுத் திராவகம் அருந்தியதாக கூறப்படுகின்றது. யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானுர். விசாரணையின் பின் தற்கொலை என தீர்ப்பு அளிக்கப்பட்டது.

### யாழ்ப்பாண டிப்போ

# பெற்றோலிய கூட்டுத்தாபன வான் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட டிப்போவுக்குச் சொந்தமான வான், நேற்று முன்தினம் பிற்பகல் ஆரியகுளம் சந்தியில் வைத்து கடத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விற்பனவு நிலையங்களில் திருத்தவேலைகள் செய்துவிட்டு, ஸ்ரான்லி வீதியிலுள்ள டிப்போவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயமே இனந்தெரியாத இரு நபர்கள் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தி வானைக் கடத்திச் சென்றதாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட வானில் சென்றே எரிபொருள் விற்பனவு நிலையங்களில் திருத்த வேலைகள் செய்வதாகவும் இந்த வான் கடத்தப்பட்டதால் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் விநியோகம் தடைப்படலாம் என்றும். இரண்டாவது தடவையாக இக் கடத்தல் இடம்பெற்றுள்ளதென்றும் டிப்போஉத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)

### உப-தபால் நிலையம்

## குருநகரில் நிறுவ முயற்சி

[யாழ்ப்பாணம்]

குருநகரில் உப-தபால் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் முயற்சி எடுத்து வருகிறுர்.

இக் கந்தோரில் 250 ரூபாவிற்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்படும். [க]

## அகற்றப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

குருநகரிலுள்ள கள்ளுத் தவறணை அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள், இக்கள்ளுத் தவறணையை வேறு இடத்திற்கு மாற்றுமாறு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

# பருத்தித்துறை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுக்கள், பாடசாலை அதிபர்களை இணைத்து ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. டபிள்யு என் எஸ், சாமுவேல் தலைமையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரிகளின் சுற்றுடலிலிருந்து ''பாதுகாப்புப் படையினரின் நிலையம்'' இடமாற்றப்படும்வரை இக்கல்லூரிகளின் மாணவர்களைக் கல்லூரிகளுக்கு அனுப்புவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்ட தீர்மானம் பற்றி கல்வி அமைச்சுச் செயலாளர் யாழ். அரச அதிபர் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களையடுத்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் நூலகம், வகுப்பறைக் கட்டிடங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து இப்பகுதி மாணவர்கள் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைஇடமாற்றவேண்டுமெனக்கோரிப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வந்ததுடன் புலோலி, கரவெட்டி, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் உண்ணுவிரதமுமிருந்து வந்தனர்.

இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் குறித்து வடபகுதி கல்விமான்கள் குழு தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியதையடுத்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையம் இடமாற்றம் செய்யப்படும் என்ற உறுதிமொழி தெரிவிக்கப்பட்டதனுல் வடமராட்சி மாணவர் ஒன்றியம் சாத்வீக உண்ணுவிரதப் போராட்டத்தை 4ம் கட்டத்துடன் முடித்துக்கொண்டது.

தற்பொழுது பொலிஸ் நிலையம் அகற்றப்படும்வரை ஹாட்லிக் கல்லூரியையும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியையும் மாத்திரம் பகிஷ்கரிப்பதென ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை இடமாற்றுமாறு கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க சிபார்சு செய்திருந்தும் இதுவரை பொலிஸ் நிலையம் இடமாற்றம் செய்யப்படாமல் இருப்பது கவலைக்குரியதென்று தெரிவித்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பருத்தித்துறை, உடுப்பிட்டிக்கிளைகள், பொலிஸ்நிலையம் இடமாற்றம் செய்யப்படாவிட்டால் எதிர்வரும் 3ம் திகதி ஒருநாள் உண்ணுவிரதத்தை அனுஷ்டிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளன.


# விவசாயிகளே!

BAYER

## மோரூட் 80% W P.(Morut)

விலை : 20 கிராம்ஸ் ரூபா 12/50 100 கிராம்ஸ் ரூபா 60/00

பயிர்களைத் தாக்கும்
அடி அழுகல், வேர் அழுகல், விதைகள் மூலம்
பரவும் பூஞ்சண நோய்களையும்
சிறப்பாகக் கட்டுப்படுத்தும்
'மோரூட்' பாவித்து சிறந்த பலன் பெறுங்கள்.

இது பல வருடங்களாக உங்களுக்கு சேவையாற்றும்
''பாயர்'' தயாரிப்பு

## போமசொல் போட்டோ(Pomosol Forte)

விலை : 100 கிராம் ரூபா 17/50

மிளகாய் மற்றும் காய்கறி நாற்றுமேடையில்
ஏற்படும் அடி அழுகல், பயிர் அழுகல் போன்ற
பூஞ்சண நோய்களை சிறப்பாகக் கட்டுப்படுத்தும்
மற்றுமோர் சிறந்த ''பாயர்'' தயாரிப்பு.

# ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள் :

யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னுர்.

# விவசாயபீடக்காணி

## பல்கலைக்கழகத்திடம் கையளிப்பு!

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கான காணியில் ஒரு பகுதி பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளித்துவிட்டதாக கிளிநொச்சி மாவட்டக் காணி அதிகாரி திரு. பத்மநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி 155-ம் கட்டையில் இயங்கி வந்த பட்டுப் பூச்சி வளர்ப்பு நிலைய காணியே விவசாயபீடத்திற்கு ஒரு பகுதியாக ஒதுக்கி கையளித்ததாகவும் மிகுதிக் காணியையும் கையளிக்க நடவடிக்கை எடுத்த வேளை சில முட்டுக்கட்டைகள் ஏற்பட்டதால் அவற்றை கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்த மாவட்டக் காணி அதிகாரி திரு. பத்மநாதன் பொதுமக்கள் உயர்ந்த நோக்குடன் இதுவிடயத்தில் ஒத்துழைப்புத் தரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

---

பாடசாலை

## உதைபந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யழ்ப்பாணக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியின் 'ஏ' பிரிவு ஆட்டம் எத்தரப்பினருக்கும் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில், இரு தரகபினரும் மிகவும் வேகமாப் விளையாடிய போதும், ஆட்டம் முடிவடையும் வரை எத்தரப்பினரும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்.

### கொக்குவில் வெற்றி

மேற்படி இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 3 0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எஸ், அகஸ்ரின் மத்தியஸ்தம் வகித்தார்.

### யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

இவ்விரு கல்லூரிகளின் 'ஸி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டி 1—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எம். டி. தம்பிராசா மத்தியஸ்தம் வகித்தார்.

இப்போட்டிகள் அனைத்தும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது (வி)

---

## பருத்தித்துறையில் இன்று மரம் நாட்டும் இயக்கம்

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதியில் இயற்கைவளப் பாதுகாப்பு சுற்றுடல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பாரிய மரம் நாட்டும் இயக்கம் நடாத்தப் படவுள்ளது.

இம் மரம் நாட்டும் இயக்க ஆரம்பவிழா இன்று சனிக்கிழமை பருத்தித்து[illegible] புலோலிகிழக்கு சிவன்கோவில் இருக்கும் பார்வதபத்தினி கலாமண்டப முன்றலில் பருத்தித்துறை உதவிஅரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெறவுள்ளது.

தொழில் அதிபர் 'சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா மரக்கன்றுகளையும் கால்நடைகளுக்கான தீனி புல்வகைகளையும் பொதுமக்களுக்கு வழங்குவாரென மரம் நடுகை இயக்கம் சார்பாக திரு. எஸ். ரீ. மார்க்கண்டு தெரிவித் துள்ளார்.

---

## நாளை சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலைய உறுப்பினர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை அரசடி வீதி உட்பட நல்லூரில் இநக்கு நாலு ஒழுங்கையை சிரமதான மூலம் செப்பனிட உள்ளனர்.

தொடர்ந்து நிலைய அங்கத்தவர்களால் கோயில் வளவும், நிலைய விளையாட்டு மைதானமும் திருத்தம் செய்யபடும். இதற்கான ஒழுங்குகளை நிலையத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

---

## கனடா பயணம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேசைகள் மன்ற அவரங்கால் விவேகானந்தா இளைஞர் கழகத் தலைவரான திரு வ. ஸ்ரீவசந்தகுமார் கனடா பயணமாகியுள்ளார்.

கனடாவில் கலை, கலாச்சாரம் விவசாயம், கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளில் பயிற்சி பெறும் முகமாகவே அங்கு செல்லுகின்றார். கோப்பாய் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச திற்கான 'நிஸ்கோ' பிரதேச சபைத் தலைவரான இவர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

---

## ரூ 3லட்சமென மதிப்பீடு

(மாவிட்டபுரம்)

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தில் கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதி 3லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 7இளைஞர்கள் புகுந்து அங்கு காவலில் இருந்தமூன்று காவலாளிகளையும் அறையில் பூட்டிவைத்து அங்கிருந்து ரி வீ.யில்படம் காட்டும்டெக் கட்டச்சு இயந்திரம், போட்டோகொப்பி எடுக்கும் இயந்திரம், ஆய்வு மேற் கொள்ளும் கருவிகள் கொள்ளையிடப்பட்டதாக மேற்படி நிலையகாவலாளி ஏ. நடராசா காங்கேசன் துறை பொலிசில்புகார் செய்துள்ளார்.

---

## இ- தொ. கா.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றதாகவும் இதில் இடம் பெறமுடியாதவர்கள் சிலர் ஒன்றுகூடி கிளிநொச்சியில் இ. தொ.காங்கிரஸ்சை பிளவு படுத்த முற்பட்டு மற்றுமோர் பிரிவாக இயங்க முன்வந்தது கண்டிக்கத்தக்கது எனவும் பிரஸ்தாப அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## 34 வருடசேவை



கொழும்பு நீதிநிர்வாக மாவட்ட சமாதான நீதவானுக (ஜே பி) கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பதவி வகித்து வருபவரான கொழும்பு காணிஅபிவிருத்தி திணைக்கள நிர்வாக அதிகாரி (ஓ ஏ) யான திரு,வி. பரமேஸ்வரன் அண்மையில் தமது 34வருட அரசசேவையின் பின்னர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார் இவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் கடமையாற்றி பின்னர் கொழும்பு காணிஅபிவிருத்தி திணைக்களத்திற்கு மாற்றலாகி அங்கு நிர்வாக அதிகாரியாக பலஆண்டுகள் சேவையாற்றினர்.

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரிய சங்க நிர்வாக உறுப்பினராக பல ஆண்டுகள் இருந்து அக் கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டார். அகில இலங்கை சிவப்பிராமண சங்க ஆரம்ப ஆயுள்சந்தாதாரராக விளங்கும் திரு பரமேஸ்வரன் அச் சங்கத்தின் பொறுப்பான பதவிகளை வகித்ததோடு சங்கத்தின் வளர்ச்சிக்காகஅரும்பாடுபட்டுஉழைத்துள்ளார்.

உடுவிலை பிறப்பிடமாகக் கொண்ட இவர் சுன்னகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் முன்னாள் தமிழ் சமஸ்கிருத பண்டித ஆசிரியர் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்களின் மூத்தபுதல்வரும், கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை முன்னாள் அதிபராக விளங்கி அண்மையில் காலமான கந்தரோடை பிரம்மஸ்ரீ சு சிவசுப்பிரமணியக் குருக்களின் மருமகனுமாவார்.

உடுவில் முருகமூர்த்திவித்தியாசாலை, சுன்னகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவராகவும் திரு பரமேஸ்வரன் விளங்குகின்றார். (உடுவில் நிரு)


**வின்ஸர்** [யாழ்.]
22-10-84 வரை
10-30, 2-30, 6-15
எம்.ஜி ஆர். ஜெயலலிதா
**கணவன்**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Doug McClure,
Don Knight
ESCAPE OF THE
BIRD MAN
Color-Action Packed
சண்டைகள் நிறைந்தபடம்

**ஹரன்** (யாழ். நகர்)
10-15, 12-30, 2-15,
4-15, 6-00
Bruce lee
Strikes Again
in His Best Thriller
DRAGON STRIKES
AGAIN
(Strictly For Adults)

முதல்தர 'திகில்' படம்
**றீகல்** [யாழ் நகர்]
சில தினங்கள் மட்டும்)
10-30, 2-15, 4-30 only
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**ராணி** (யாழ்ப்பாணம்)
ரசிகப்பெருமக்களுக்கு
''ராணி''யின்
தீபாவளிப் பரிசு
சிவாஜியின்
**நிச்சய தாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
ஏ.வி.எம். ராஜன்
சாவித்திரி
**புகுந்த வீடு**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
பிரதாப்—ஷோபா
**அழியாத கோலங்கள்**
வெகுவிரைவில்
கே. பாலசந்தரின்
**பூவிலங்கு**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
எம்.ஜி.ஆர்- சரோஜாதேவி
எம். ஆர். ராதா
**தாயைக் காத்த தனயன்**
(புதிய பிரதி)
தீபாவளிவெளியீடு
23- 10- 84 முதல்
**தாயில்லாமல் நானில்லை**

**லிடோ** சினிமா
10-30, 2-30, 6-30
**தேன்சிந்துதே வானம்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
மோகன் - பூர்ணிமா
**பயணங்கள் முடிவதில்லை**
[ஈஸ்மன்கலர் - புதியபிரதி]

விற்பனையாகின்றன
**PHONIX—பொனெக்ஸ்**
லேடிஸ் - ஸ்போட்ஸ்
சைக்கிள்கள்
**நா. சாம்பசிவம் அன் கோ**
54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(301)

**மின்சார பிரச்னையா?**
வீட்டு வயரிங் செய்ய (பொயின்ருக்கு ரூபா 35/-)
★ மோட்டர் ★ ரான்ஸ்போமர் ★ ஸ்பீக்கர்
★ வாஷிங் மெஷின் ★ மிக்சர்ஸ்
★ லிக்குடைசேர்ஸ் ★ எலெக்றிக் குக்கர்
★ மின்விசிறிகள் ஆகியன
திருத்த / றீவைன்டிங் செய்ய
**ஒமேகா** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிஅருகில்)

**தொழிற் பயிற்சிகள்**
THEORY AND PRACTICALS
ஆரம்பம்: 1-11-84
[1] Industrial and House Wiring - 2மாதம்-Rs. 500/-
[2] Motor Re-winding - 4 மாதம் - Rs. 800/-
[3] Electrical Engineering Practice - 6மாதம்-Rs. 850/-
கல்வித்தகைமை:
G. C. E ORD. LEVEL விஞ்ஞானப் பாடங்கள்.
செய்முறைப் பயிற்சி - ஒமேகாவில்
**OMEGA TECHNICAL INSTITUTE,**
448, K. K. S. ROAD, JAFFNA.
(Near - Jaffna Hindu College)

UNIQUE COMMUNICATION SERVICE
**யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்**



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக
**24 மணிநேர சேவை**
யாழ நகர அலுவலகம்
28'18 - 1 1 மகாதமா காந்தி றேட்.
(சலுசலவுககு அனமையில)
யாழபபாணம்.
ரெலெகஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழுமபு நகர அலுவலகம
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ 1917, 54 யோர்க வீதி, கொழும்பு :
ரெலெகஸ.- 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

# "எம்.ஜி. ஆருக்கு இருதயம் கொடுக்க நான் தயார்"

[சாவகச்சேரி]

"சென்னை மருத்துவ மனையில் உடல்நோய்வாய்ப்பட்டிருக்கின்ற தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் உடல்நலத்துக்கு மனித சரீரத்தில் இருந்து எந்த உறுப்புத் தேவையானாலும் கூட, குறிப்பாக இருதயம் வேண்டுமானாலும் நான் அதனை எந்த நேரத்திலும் எனது உடலில் இருந்து வழங்கத் தயாராக வுள்ளேன்."

இவ்வாறு கைதடி அகதிகள் முகாமில் நேற்றையதினம் நடைபெற்ற தமிழக முதல்வர் நலம் வேண்டி ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணுவிரதத்தில் நவபுரம் ச. தங்கராசா சபதம் எடுத்தார்.

## பிரார்த்தனை

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை அருள்மிகு மூத்தநயினர் ஆலய மண்டபத்தில் தமிழ்நாடு முதல்வர் உடல் நோய் நீங்கி நீடித்த ஆயுளுடன் வாழவும், பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு என்றென்றும் அன்புடன் சேவை செய்யவும் தமிழ்மக்கள் நலமுடன் வாழவும் அருள்புரியும் வண்ணம் நேற்றுப்பகல் காப்பு வழிபாடும், கூட்டுப் பிரார்த்தனையும் ஆலய வழிபாடும் மக்களால் நடத்தப்பட்டது.

## எம். ஜி, ஆர். சுகம் வேண்டி விசேட பூசை

[யாழ்ப்பாணம்]

சுகவீனமுற்றிருக்கும் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் உடல் நலம் வேண்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6-30மணிக்கு பங்குத்தந்தை வண பீ எம். இம்மானுவல் அடிகள் விசேட திருப்பலி பூசை ஒப்புக் கொடுப்பார்.

நாவாந்துறை புனித. மரியாள் அலயபக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இத்திருப்பலி பூசை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. [மா]

## கல்வித் திணைக்களத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கல்வித்திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல், துப்பாக்கிமுனையில் நான்கு தட்டச்சு யந்திரம், ஒரு ரோனியோ யந்திரம் கொள்ளையடிக்கப்பட்டது.

துப்பாக்கி இளைஞர்கள் வான் ஒன்றில் வந்தே இச் கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது. (க)

# தீயணைக்கும் படை: ரூ. 27 லட்சம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் தீயணைக்கும் படை அமைப்பதற்கு 27 லட்சம் ரூபா தேவைப்படுவதால் பொதுமக்களிடம் நிதியுதவி அளிக்குமாறு கோருவதென்று நேற்று நடந்த யாழ் மாநகர சபை உத்தியோகத்தர் மாதாந்தக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ் மாநகரசபை கமிட்டி அறையில் ஆணையாளர் திரு சி. வி கே. சிவஞானம் தலைமையில் இக்கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது.

ஆணையாளர் திரு. சிவஞானம் தீயணைக்கும் படை பற்றிகூறியதாவது:" தீயணைக்கும் படைக்கு வரி உட்பட இருபத்தி இரண்டரை லட்சம் ரூபா தேவை. இதற்கான கட்டடம் அமைக்க 3 லட்சம் ரூபாவும், உபகரணங்களுக்கு 2 லட்சம் ரூபாவும் தேவைப்படும். தீயணைக்கும் படை நிதிக்காக 25 ரூபா, 10 ரூபா டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டு மாநகரசபை ஊழியர்மூலம் விற்பனைசெய்ய ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்." (க)

## தமிழர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு ஆட்சேபம் தெரிவித்து 500 இலங்கைத் தமிழர்கள் பேர்ண் நகரில் கூடி, மனுவொன்றை சுவிஸ் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

சுவிற்சர்லாந்தில் குடியேறுவதற்கு 1623 இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பித்துள்ளனர். (வெ)

## நவீனசந்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக சங்கத் தலைவரின் கடை உட்பட இரு ஜவுளிக் கடைகள், இரு சப்பாத்துக் கடைகள் மற்றும் 3 கடைகள் முன் பக்கத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்துள்ளன.

இரும்புக் கதவுகளைத் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்து உட்சென்று ஒரு கடையில் கண்ணாடிச் ஷோக்கேஸையும், மற்றொரு கடையில் ரியூப் லைட்டையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளன.

இரவு பத்து பணிக்குப் பின்னர் 8 பெரிய வாகனங்களில் துப்பாக்கிகளுடன்வந்த சுமார் நூறும்பேர் மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தியில் குண்டொன்றை வெடித்ததாகவும், அதன் பின்னர் தாறுமாறாக நாலா பக்கங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததாகவும் கடையொன்றின் மேல்மாடியில் படுத்திருந்த ஒருவர் தெரிவித்தார். (க)

## மட்டக்களப்பு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர் விடுதியில் முகாமிட்டிருந்தனர்.

மட்டக்களப்புக்கு 100 பேர் கொண்ட அதிரடிப்படை வந்ததையடுத்து இராணுவம் வாபஸ்பெறப்பட்டதாகக் கூறப்பட்டது. அதிரடிப்படையின் இணைப்பதிகாரியாக பொலிஸ்அதிபர் செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்

மட்டக்களப்புக்கு மேலும் அதிரடிப்படையினர் வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் கடந்த இரு தினங்களாக இராணுவத்தினரின் ரோந்துசேவை இடம் பெறவில்லை.

## ஸ்டேர்லிங் பவுண் வீழ்ச்சி

லண்டன அக். 19

ஸ்டேர்லிங் பவுண் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது இதனால் பிரிட்டன் பெரும்பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது பிரிட்டனில் இடம் பெற்றுள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமே இதற்குக்காரணமென்று கூறப்படுகிறது,

# இரு இடங்களில் 3 சடலங்கள்!

(மன்னார் வவனியா நிருபர்கள்)

செட்டிகுளத்தில் மருதங்கேணி-மதவாச்சி வீதியிலுள்ள தந்திக்கம்பம் ஒன்றில் 22 வயது இளைஞர் ஒருவரின் சடலம் கட்டப்பட்டுள்ளது.

பரிசப்பிள்ளை மரிதிலி என்ற இந்நபர் இனந்தெரியாத நபர்களால் தலையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் சாரமும், ஷர்ட்டும் அணிந்திருந்தார்.

### முள்ளியவளை

இதேசமயம் முள்ளியவளையிலும் கொக்கிளாயிலும் இருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இருவரின் சடலங்களும் வேறு வேறு இடங்களில் மரத்தில் கட்டப்பட்டிருந்தன.

## மஹியங்கனை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதிமிக்க பொருட்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது இவற்றின் பெறுமதி எட்டு லட்சம் ரூபா என்று கூறப்பட்டது

கொள்ளையர்களினால் இந்த இரும்புப்பெட்டியைக் திறக்க முடியாமையினாலேயே, இதனைக் கைவிட்டுச் சென்றதா பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அத்தவேளை இந்த விகாரையிலுள்ள உண்டியல் உடைக்கப்பட்டு, 3000 ரூபா களவாடப்பட்டுள்ளது இது தொடர்பாக விசேட பொலிஸ் கோஷ்டியொன்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

கொள்ளுப்பிட்டி, தீர்வையற்ற (டியூற்றி ப்றி ஷொப்) கடைக் கட்டிடத்தில் செவ்வாய்க்கிழமை இரவு தீ விபத்து ஏற்பட்டதும், நான்காம் மாடியில் பல கடைகள் சாம்பலானதும் பழைய செய்தி.

புதிய செய்தி : என்ன நடந்ததோ என்று எண்ணி கடை உரிமையாளர்கள் அடுத்த நாள் காலை விழுந்தடித்துச் சென்றபோது, பலரின் கடைகள் பாதிக்கப்படாதது கண்டு நிம்மதி மூச்சுவிட்டனர். ஆனால் கடைக்குள் நுழைந்தபோது —

ஒரு கடையில் விலை மதிப்புள்ள எண்ணூறு கைக்கடிகாரங்களைக் காணவில்லை மற்றுமொரு கடையில் நூற்றுக்கணக்கான 'கமரா' கேஸுகள் இருந்தன. ஆனால் கேஸுக்குள் கமராக்கள் இல்லை! இன்னுமொரு கடையில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பெரும் பெரும் பொருள்கள் மறைந்திருந்தன. இதில் விசேஷம், இத்தனை கடைகளும் தீயினால் சற்றேனும் தீண்டப்படாதவை!

தீ பரவியது கண்டு வயிற்றில் அடித்துக்கொண்டு முதலைக்கண்ணீர் வடித்தவர்கள்...... இரவோடு இரவாக 'மரதன்' வேகத்தில் ஏன் ஓடினார்கள், எதனைச் சுருட்டினார்கள் என்பது... நெருப்பு அணைந்ததும்தான் தெரிந்தது!

— 'ஊடுருவி'

# சிறிய வீதிகளைத் திருத்த பிரிகேடியரின் அனுமதி கோரி ஆணையாளர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள சிறிய தெருக்களைத் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்குமாறு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம், யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. நளின் செனிவரத்தினவிடம் கோரியுள்ளார்.

இணைப்பு அதிகாரிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

"யாழ் நகரில் உள்ள சிறு வீதிகள் பெருந்தெருக்கள் சபையின் பொறுப்பில் இல்லை. சபையின் பொறுப்பிலுள்ள சிறு தெருக்களை திருத்த அங்கிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குறித்தகாலத்தில் இத் தெருக்கள் திருத்தப்படாவிட்டால், வீதிகள் பழுதடைந்துவிடும். பின்னர் இவற்றை பழைய நிலைக்கு கொண்டுவர நிதிநிலைமை இடம் கொடுக்காது,"

# மோட்டார் சைக்கிள்கள் கடத்திச் செல்லப்பட்டன

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி உதவி விவசாய விரிவாக்க பணிப்பாளர் பணிமனையில் இரு மோட்டார் சைக்கிள்கள் இனந்தெரியாத நபர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

பிரஸ்தாப பணிமனை பிரதம லிகிதர் என். தனபாலசிங்கம் இது குறித்து கிளிநொச்சி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன் காணி அலுவலகத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்றைய தினம் காணி அலுவலகத்தில் அனுதரவான நிலையில் மீட்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி கமநல சேவைத்தலைவர் திரு. கே. பாக்கியநேசரின் உத்தியோக பூர்வ மோட்டார் சைக்கிள் கடந்த சில வாரங்களுக்கு முன் அபசரிக்கப்பட்டதாயினும் இன்னும் மீட்கப்படவில்லை.

# சமய அறிவுப்போட்டி இன்றைய நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

கீரிமலை சிவநெறிக் கழகம், யாழ்ப்பாணம் ஷப்ரு யுனிக்கோ பிளுஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் ஆதரவில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் சைவசமய அறிவு வினாடி வினாப் போட்டியின் இறுதி நிகழ்ச்சி விபரம் வருமாறு:-

இன்று காலை ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சிகளுக்கு கழகத்தின் பிரதித் தலைவர் இலக்கண வித்தகர் பண்டிதர் இ நமசிவாயம் தலைமை வகிப்பார். கழகத்தலைவர் சிவஸ்ரீ கு நகுலேஸ்வரக்குருக்குள் கொடியேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்துவைப்பார் கழகப்புரவலர் திரு க இரத்தினவேல் தொடக்கவுரை நிகழ்த்துவார்

இந்நிகழ்ச்சிகளின் போது பாடசாலை மாணவர்களுக்கு இடையில் சைவ சமய அறிவு வினாடி வினாப் போட்டியுடன் தொண்டு டும் செயல்முறைப் போட்டிகளும் நடைபெறும்.

பிற்பகல் நடைபெறும் மாலை நிகழ்ச்சிகளின்போது இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்களும், சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன இளைப்பாறிய வட பெரும்பாகக் கல்விப் பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்குவார்.

வினாடி வினாப் போட்டி முதனிலைத் தெரிவுகளிலிருந்து மேற்பிரிவில் இறுதி நிகழ்ச்சிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் ஆகியனவும்—

கீழ்ப்பிரிவில் இறுதி நிகழ்ச்சிக்கு தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், கொக்குவில் இந்துபிரதம பாடசாலை ஆகியவையும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

# மரண அறிவித்தல்

## ஆ. சண்முகராசா

யாழ்ப்பாணம் சண்முகம் அன் சன்ஸ் உரிமையாளர் ஆ சண்முகராசா காலமானார் இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், மகாலட்சுமி, இராசலட்சுமி, இராசரெத்தினம், மனோகரன் (U K), மனோரஞ்சிதம், மலர்விழி, இராஜேந்திரா (கோலாலம்பூர்), தையல்நாயகி ஸ்ரீதேவி (Grindlays Bank Ltd, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற பரமேஸ்வரன், இராஜேந்திரா (Kaualunpur), சிவஞானவதி ராஜரட்ணம் ஆகியோரின் மாமனாரும், சிலைச்செல்வன், அநுசூயா, சுரேஸ், ஜெயகணேஷ். ஜனார்த்தனி ஜனகோபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் மரணச்சடங்குகள் 185 (149) நாவலர் வீதியில் 21ம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும் பின் பயன்மலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல் ராஜரட்ணம் (மகன்)

327

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் -20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber elephone 22389 - 24126.